நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை, திருமதி.S.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026-ம் வருடம் பிப்ரவரி திங்கள் 5-ம் நாள் வியாழக்கிழமை
குற்றப்பலவகை மனு எண்.324/2026
CNR.No.TNTS02-000927-2026
IN
குற்ற எண்.196/2023
in
PRC.No.29/2025

மாரிமுத்து,
த/பெ.ராமர் ... மனுதாரர்/வாகன உரிமையாளர்

/எதிர்/

காவல் உதவி ஆய்வாளர்,
சொக்கம்பட்டி காவல் நிலையம். ... புகார்தாரர்/எதிர்மனுதாரர்

இம்மனுவானது இன்று விசாரணைக்காக வரப்பெற்று மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர்.காளிராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 தென்காசி அவர்கள் ஆஜராகியும் வரப்பெற்ற இம்மனுவில் இரு தரப்பையும் கேட்டு ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

**உத்தரவு**

1. **மனுவின் சுருக்கம்** -

மனுதாரர் வழக்கு சொத்தின் உரிமையாளர் என்றும், இவ்வழக்கானது தன்மீதும், மற்ற எதிரிகள் மீதும், சொக்கம்பட்டி போலீசாரால் U/s.379 IPC ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, தனக்கு சொந்தமான TN 76 BA 4854 என்ற பதிவெண் கொண்ட TVS XL 100 Heavy duty என்ற இருசக்கர வாகனத்தை சொக்கம்பட்டி போலீசார் கைப்பற்றி காவல் நிலைய பாதுகாப்பில் வைத்துள்ளனர் என்றும், மேற்படி வாகனம் தனக்கு சொந்தமானது என்றும், மேற்படி வாகனம் ரூ.50,000/- விலைமதிப்புமிக்கது என்றும், மேற்படி வாகனம் காவல் நிலைய பாதுகாப்பில் இருப்பதால் மழையிலும், வெயிலும் பட்டு அதன் பாகங்கள் கெட்டுப்போய் பின்னர் என்னால் உபயோகப்படுத்த முடியாமல் போய் தனக்கு தாங்க முடியாத கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும் என்பதாலும், மேற்படி வாகனம் தனக்கு அவசியமாய் தேவைப்படுகிறது என்றும், மேற்படி வாகனத்தின் ஆர்.சி புத்தகத்தின் நகலை இத்துடன் இணைத்துள்ளதாகவும், எனவே, மேற்படி

வாகனத்தினை மனுதாரரிடம் தற்காலிகமாக ஒப்படைக்க உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. அரசு தரப்பு பதிலின் சுருக்கம் –**

அரசு தரப்பில், எதிரியிடம் வழக்கு சொத்தினை ஒப்படைக்கும் பட்சத்தில் அவர் விற்றுவிடவோ அல்லது உருமாற்றம் செய்யவோ கூடும், மேலும் வழக்கு விசாரணைக்கு தேவைப்படும்போது ஆஜர்படுத்தாமல் இருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்றும், மேலும் இதே தவறை மீண்டும செய்வதற்கு வாய்பிருக்கிறது என்றும், எனவே, மேற்படி வாகனத்தை எதிரியிடம் வழங்க கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**3. தீர்வு –**

வழக்கு ஆவணங்களைப் பரிசீலிக்கும் போது, மனுதாரர் இவ்வழக்கின் 2ம் எதிரி ஆவார். இந்த வழக்கானது u/s. 379 IPC–ன் கீழ் பதிவு செய்யப்பட்டு PRC.No.29/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. மேலும் அரசு தரப்பில் கைப்பற்றப்பட்ட சொத்தான TN 76 BA 4854 என்ற பதிவெண் கொண்ட TVS XL 100 Heavy duty என்ற இருசக்கர வாகனம் பி.ஆர்.எண்.614/2024 பிரகாரம் பெறப்பட்டு நிலைய பாதுகாப்பில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்யும் போது மனுதாரர் வழக்கு சொத்தின் உரிமையாளர் என்பது தெரிய வரும் நிலையிலும், மனுதாரர் தரப்பில் மேற்படி வாகனத்தின் ஆர்சி புத்தகத்தின் நகலை தாக்கல் செய்துள்ள நிலையிலும் நீதியின் நலனை கருத்தில் கொண்டும், மேலும் மேற்படி வாகனத்தை தொடர்ந்து இயக்காவிட்டால் அதன் உதிரி பாகங்கள் சேதமடைந்துவிடும் என்பது தெரிய வரும் நிலையிலும், தக்க ஜாமீன்தாரர் அடிப்படையில் மனுதாரரின் மேற்படி பொருளை மனுதாரரிடம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. எனவே, மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கிய ***Sunderbhai Ambalal Desai Vs. State of Gujarat*** உத்தரவின்படியும், மனுதாரர் வசம் அவர் மனுவில் கோரியுள்ள மேற்படி மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மேற்படி பி.ஆர்.எண்.614/2024–ல் தாக்கலான வழக்கு சொத்தான TN 76 BA 4854 என்ற பதிவெண் கொண்ட TVS XL 100 Heavy duty என்ற இருசக்கர வாகனம் ஒன்று மனுதாரருக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் இடைக்காலமாக திருப்பிக் கொடுக்க உத்தரவிடப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்</u>** :–

1. மனுதாரர் ரூ.50,000/–க்கு தான் சொந்த பிணை பத்திரமும், இரு நபர் பிணை பத்திரமும் எழுதிதர வேண்டும்.
2. வழக்குச் சொத்தினை 4 கோணங்களில் புடைப்படம் எடுத்து, குறுந்தகடுடன் தாக்கல் செய்ய வேண்டும்.
3. நீதிமன்றம் வேண்டும் போதும், விசாரணையின் போதும் மேற்படி சொத்தினை ஆஜர்படுத்த வேண்டும்.
4. வழக்குச் சொத்தினை குற்ற செயலுக்கு உபயோகப்படுத்தக் கூடாது.
5. மேற்படி வழக்குச் சொத்தினை **Judicial form No.82 in order to Rule 257(1) of criminal rules of practice 2019** ன் படி பஞ்சநாமா தயார் செய்து இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.
6. மேலும், அரசால் மேற்படி வழக்கு சொத்து குறித்து Confiscation நடவடிக்கை எடுக்குப்படும் பட்சத்தில் அதற்கு ஒத்துழைக்க வேண்டும்.
7. மேலும், நீதிமன்றத்தால் வேண்டப்படும் போது வழக்கு சொத்தை திரும்ப நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.
8. ஆர்.சி புத்தகத்தின் அசலை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026–ம் வருடம் மார்ச் திங்கள் 5–ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S MUTHU LAKSHMI

Digitally signed by S MUTHU LAKSHMI
Date: 2026.03.05 16:00:54 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.